**ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்;

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்;

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கை இடப்படும் அனைத்து புள்ளிவிபரவியல் தகவல்களுக்காகவும் ஒப்பிட்டு | பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றினுள் கடந்த வருடத்தின் | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றிற்கு ஒப்பிட்டு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா.3,934,469 கூட்டுத் தொகையான முன்னைய காலப்பகுதிக்கான சீராக்கங்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தவறுதலாக இடம் பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் நூதனசாலையில் உள்ள வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் 50 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் தனித்தனியாக கணக்கு வைக்கப்படாது ரூபா.32,061,929 தொகையான காணிகளும் உள்ளடங்கலாக கட்டிடங்களுக்கு 5 சதவீதமான அதாவது ரூபா.1,687,075 பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த விடயம் தொடர்பில் மேலதிகமாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளளல் மற்றும் தொடர்ந்தும் தகவல்களை ஆராய்தல் மேற்கொள்ளப்படுவதுடன் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு மேலதிக நடவடிக்கைகள் துரிதமாக நிறைவு செய்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ரூபா.21,113,434 கிரயமான முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாய பெறுமதியை கணக்கு வைப்பதற்கு மற்றும் 92 ஆம் பந்தியின் பிரகாரம் கொண்டுசெல்லும் பெறுமதியை குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அதிகமான காலப்பகுதி போக்குவரத்து தடைகள் விதிக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதிக்கு அளவிடப்படவேண்டிய போதிலும் ரூபா.2,699,598 தொகையான விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள புத்தக இருப்பினை கணிப்பிடும் அடிப்படை 47(அ) பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் இருப்பு அலகுகளின் அளவு மற்றும் அலகு பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா.394,665 தொகையான விற்பனை விலையில் காண்பிக்கப்பட்டிருந்த 1914 அழிவடைந்த புத்தகங்கள் 38 முதல் 42 வரையான பிரிவுகளின் பிரகாரம் தேறக்கூடிய பெறுமதிக்கு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புத்தக இருப்பின் பெறுமதியை கணிப்பீடு செய்யும்போது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. சேதமடைந்த புத்தகங்களை விசாரணை சபையினுடாக இனங்கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 15 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டின் பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகளை ஒப்பிடும்போது அவற்றுக்கிடையிலான பொறுன்மையான வேறுபாடுகளுக்கான காரணங்களுக்கு தெளிவுபடுத்தல் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் பாதீட்டின் பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கான காரணங்களை தெளிவுபடுத்த குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (எ) | 1998 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தகவல் நிலையம் எனும் பெயருடைய இணைந்த தனியார் கம்பெனி ஒன்று ரூபா.5,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கம்பெனி 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்தது. இந்த முதலீட்டுத் தொகையில் ரூபா.700,000 மாத்திரம் மீளக் கிடைத்திருந்ததுடன் நிறுவனம் மூடப்பட்டு 13 வருட காலம் கடந்திருந்த போதிலும் | J. R. Jayewardene Information centre இல் முதலீடு செய்யப்பட்ட ரூபா.4,300.000 ஆன தொகை நீண்ட கால முதலீட்டில் இருந்து அகற்றுவதற்கு 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் | இந்த முதலீடு நட்டமொன்றாக கணக்குகளில் சீராக்க உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தீர்வையாகாத ரூபா.4,300,000 ஆன தொகை நீண்ட கால முதலீடு ஒன்றாக தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. தீர்வையாகாத இந்த முதலீடு நட்டம் ஒன்றாக நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்ளப்பட்டு திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முன் வைக்கப்பட்டுள்ளதுடன் பொது திறைசேரியினால் புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உரிய அதிகாரத்துடன் மற்றும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பான விபரங்களை தெரிவிக்காது தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா.18,105,318 தொகையான நிலையான வைப்பு மீள பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நிறுவனத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்தமையால் மீண்டெழும் செலவினத்தை தீர்ப்பனவு செய்வதற்கு நிலையான வைப்புக்கள் காசாக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டினுள் கட்டுப்பாட்டுச் சபை கூட்டம் ஒன்றினை நடாத்தியிராததுடன் எதிர்காலத்தில் நடாத்தப்படும் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் இதற்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீட்டில் இருந்து மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் அங்கீகாரமின்றி மாதாந்தம் ரூபா.4,000 படியான மருத்துவப் படிகளும் ரூபா.1,000 படியான விசேட படியொன்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் செலுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டிற்னுள் ரூபா.1,371,720 செலவிடப்பட்டிருந்தது JM 1-2 குறியீட்டின் அடிப்படையில் சம்பளம் செலுத்தப்படும் 3 | ஜே.ஆர்.ஜெயவர்தன நிலையத்தினால் வருடாந்தம் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் திறைசேரியிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதால் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள படிகளுக்காக திறைசேரியின் | படிகளை செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களுக்கு ரூபா.1,000 படியாக தொலைபேசி படிகளும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா.3,000 படியாக ஒரு உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா.5,000 படியாகவும் நிறைவேற்று படிகள் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன. | அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜெயவர்தன நிலைய அதிகார சட்டத்தின் மூலம் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் வேதனங்கள் மற்றும் படிகளை தீர்மானிக்கும் முழுமையான அதிகாரம் கட்டுப்பாட்டுச் சபையிடம் காணப்படுவதால் கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளை செலுத்துவதற்கு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 13 பேரேட்டுப் பதிவுகளின் மூலம் இலாப நட்ட ஒதுக்கத்திற்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா.1,836,901 கூட்டுத் தொகையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் 10 உருப்படிகளுக்காக விரிவான தகவல்கள் மற்றும் பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள், ரூபா.41,088,322 தொகையான 122 பேரேட்டுப் பதிவுகள் உரிய பயன்பாட்டு ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கட்டுப்பாட்டுச் சபை கூட்டம் ஒன்று நடத்தப்படாமையால் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டுப்பாட்டு சபை கூட்டத்திற்கு இத்தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் / பதிவேடுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 | விரிவான கணக்காய்வு | கட்டுப்பாட்டு சபை | அதிகார |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க நிதி அதிகார சட்டத்தின் (8)13 உப பிரிவு | அறிக்கை கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கோ அறிக்கைக்கு உரிய பதில்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கூட்டம் ஒன்று நடத்தப்படாமையால் கணக்காய்வு அறிக்கை கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு சபை கூட்டத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் உப பிரிவு | நிலையத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில் லை. | 2022 ஆம் ஆண்டில் நிலயத்திற்காக ஆட்சேர்க்கும் நடைமுறை ஒன்றை தயாரித்து அங்கீகரிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 10.4 ஆம் உப பிரிவு | 10 வருடங்களுக்கு குறைவான சேவை காலத்தை உடைய 7 உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன் வழங்கும்போது பிணையாளர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய உரித்துடைய வெளிவாரி நபர் ஒருவரின் பிணைச்சான்றிதழ் ஒன்றினை விடவும் நிறுவனத்தின் ஊழியர் ஒருவரின் பிணை சான்றிதழ் அபாயம் குறைந்ததாக காணப்படுவதால் நிறுவனத்தில் சேவையாற்றும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் பிணையாளராக பயன்படுத்தப்பட்டார். | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கே ாவை** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | நிலையான வைப்புகளை மதிப்பாய்வு செய்து அறிக்கைகள் மார்ச் 31 | 2022 ஆம் ஆண்டு முதல் நிலையான வைப்புக்களை | நிதி பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வு செய்து அந்த அறிக்கைகள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு அனுப்பி வைக்க குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | நிலையத்தின் இரண்டு வாகனங்களின் நாளாந்த ஓட்ட குறிப்புகள் மற்றும் சம்பவ குறிப்புப் புத்தகங்கள் உரிய முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் நாளாந்த ஓட்ட குறிப்புகள் மற்றும் சம்பவ குறிப்புப் புத்தகங்களை பேணுவதற்கு உரிய அறிவுரைகளை உதவி நிர்வாக உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | விழா மண்டபங்களுக்காக அறவிடப்படும் திருத்தப்பட்ட கட்டணங்களுக்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைய அதிகார சட்டத்தின் மூலம் நிதியம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் இதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிராத 2021 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தில் அங்கீகரிக்க மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பிலான விபரங்கள் மற்றும் வருமான சேகரிப்புகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிராததுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டுச் சபை கூட்டம் ஒன்று நடத்தப்பட்டிராமையால் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டு முதல் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் குறித்த தகவல்களை சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் | 2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்காக கட்டுப்பாட்டு சபையின் | கட்டுப்பாட்டு சபையின் கூட்டமொன்று நடத்தப்படாமல் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2019 டிசம்பர் 09 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கையிடலை அடிப்படையாகக் கொண்ட 2019 ஆம் ஆண்டிற்கான ஊழியர் ஒருவருக்கு ரூபா.15,000 படியாக ரூபா.392,500 ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2020 டிசம்பர் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்புகள் செலுத்தப்படவில்லை என தவறான தகவல்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு ஒரு ஊழியருக்காக ரூபா.54,000 படியாக ரூபா.1,296,000 தொகை 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலையம் நட்டம் ஈட்டி இருந்தமையால் மேற்படி ஊக்குவிப்புப் படி ஊழியர்களுக்கு உரித்தற்றது என்பதால் 2019 ஆம் ஆண்டிற்கானது என குறிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்குவிப்புப் படிகளானது 2019 ஆம் ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே செலுத்தப்பட்டுள்ளது. 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜெயவர்தன மத்திய நிலைய அதிகார சட்டத்தின் மூலம் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தவேண்டிய படிகளை தீர்மானிக்கும் அதிகாரம் கட்டுப்பாட்டுச் சபைக்கு உரியதாகும். அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஊக்குவிப்புப் படிகளை செலுத்துவதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. தவறான தகவல்களை சமர்ப்பித்து கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனும் கூற்றுடன் இணங்க முடியாது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2018 ஏப்ரல் 6 ஆம் திகதிய DMS/1835 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால DMS/1835 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2018 ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் நிலையத்திற்கான பதவியணி அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் HM 1-2 தொகுதியில் சம்பள குறியீட்டின் கீழ் செயலாளர் நாயகம் பதவி அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறான | செயலாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் பாதவியொன்றாவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பதவியணியை அங்கீகரிப்பதற்கு அனுப்பப்பட்ட பதிவேட்டில் தவறுதலாக பதிவாளர் நாயகத்தின் பதவி நிரந்தர பதவி ஒன்றாக HM 1.2 சேவை தொகுதியின் கீழ் | பொது சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் செயலாளர் நாயகம் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை என்று உரிய முறையில் மேற்கொண்டு ஆட்சேர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வைக்கப்பட்டுள்ளது. ஏற்பட்டுள்ள இந்த தவறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | |
| **(ஐ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவை** | | | |
| (i) | வழிகாட்டி இலக்கம் 2.8 மற்றும் 4.3 | 2014 ஆம் ஆண்டு நிலையத்தின் புதிய இரண்டு மாடி கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய முன்பெறுகை நடவடிக்கைகளாக மொத்த கிரய மதிப்பீட்டினை தயாரித்து பாதீடு, செயல் நடவடிக்கை மற்றும் பெறுகைகள் திட்டங்களுக்கு உள்ளடக்குதல், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றினை நியமித்தல் மற்றும் பெறுகை ஆவணங்களை அங்கீகரித்தல், தேவையான திட்டங்களை அங்கீகரித்தல், நிர்மாணங்களுக்குரிய நிறுவனங்களின் சட்ட ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல், பெறுகை நடைமுறை ஒன்றினை பின்பற்றி மதியுரையாளர் ஒருவரை தெரிவு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய கட்டிடத்தின் நிர்மாணததிற்காக மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. அவ்வாறே பெறுகை நடைமுறையை அங்கீகரித்தல் இடம்பெறவில்லை. தேவையான திட்டங்களை அங்கீகரிக்காது அல்லது நிறுவனங்களின் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. பெறுகை நடைமுறை ஒன்றினை பின்பற்றி மதியுரையாளரை தெரிவு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ii) | வழிகாட்டி இலக்கம் 5.4.8 மற்றும் 8.9.2 | புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் | புதிய இரு மாடி கட்டிடத்தின் நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட |

| | | |
|---|---|---|
| முறையான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஒப்பந்த பெறுமதியின் 5% இற்கு குறையாத செயலாற்றல் பிணை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒப்பந்த பெறுமதியின் 5 சதவீதத்திற்கு குறையாத செயலாற்றல் பிணை ஒன்றினை பெற்றுக்கொள்ளவில்லை. | வேண்டும். |

**1.7 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வெளிவாரி தரப்பினரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா.7,025 தொகையான முத்திரை கட்டணங்கள், தேசிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா.184,589 மற்றும் பெறுமதி சேர் வரி ரூபா.1,955,488 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது 6 மாதங்கள் முதல் 3 வருடங்கள் வரையான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த வரித் தொகை தொடர்பில் எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கலந்துரையாடுவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 7,884,169 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 5,007,114 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபெறுகளில் ரூபா 2,877,055 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் கட்டிட வாடகை ருமானம் ரூபா 4,018,201 இனால் அதிகரித்திருந்த போதிலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,726,437 இனால் அதிகரித்தமை மற்றும் மண்டப வாடகை வருமானம் ரூபா 2,744,074 இனால் குறைவடைந்தமை மற்றும் ஊழியர் வேதனம் ரூபா 1,458,000 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டு தனியார் வங்கி ஒன்றில் ரூபா.9,725,000 ஆன தொகை நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வங்கி நட்டம் அடைந்த காரணத்தால் மத்திய வங்கியால் வைப்பாளர்களின் | ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலையத்தினால் 2002 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா பிரமுக வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா.9,725,000 ஆன தொகை அந்த வங்கி | முதிர்வடைந்துள்ள கடன்முறிகள் மற்றும் 09 வருடத்திற்குரிய வட்டியை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்போ இலங்கை சேமிப்பு வங்கியின் ஊடாக தீர்ப்பனவு செய்யும் முன்மொழி ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த பணம் 5 சதவீத வருடாந்த வட்டியின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கடன் முறிகளாக வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் முதல் 02 வருட காலத்திற்கு உரிய வங்கி இணங்கிய வட்டி செலுத்தாத காரணத்தால் நிலையத்திற்கு ரூபா.972,500 ஆன வட்டித்தொகை இழக்கப்பட்டிருந்தது. 2017 டிசம்பர் 03 ஆம் திகதி இந்த கடன்முறிகள் முதிர்வடைந்திருந்த போதிலும் ஆரம்பத் தொகை மற்றும் 09 வருட காலத்தில் வட்டி தொகையான ரூபா.13,617,664 ஆன தொகையை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் அடைந்தமையால் இலங்கை மத்திய வங்கியின் கட்டளையின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் திகதியிலிருந்து 2017 டிசம்பர் 03 ஆம் திகதி வரையான பத்து வருட காலத்தில் முதிர்வடையும் இலங்கை சேமிப்பு வங்கியின் கடன் வழிகளில் முதலீடு செய்யப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் இந்த கடனுக்கு 09 வருட காலத்திற்கு உரிய வட்டி வருமானம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கட்டுப்பாட்டுச் சபையயினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சபை கூட்ட அறிக்கை இலங்கை சேமிப்பு வங்கிக்கு வழங்கப்படவேண்டிய போதிலும் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டம் ஒன்று ஒழுங்கமைப்பதற்கு முடியாத காரணத்தால் இந்த முதலீட்டு தொகை மற்றும் வட்டி தொகையை மீளப் பெற்று முதலீடு செய்ய முடியாதுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | மத்திய நிலையம் அமைந்துள்ள கொழும்பு 07, தர்மபால மாவத்தை, 191 ஆம்இலக்க இடத்தில் காணப்படும் மூன்று ரோடு 4.47 பேர்ச் பரப்பளவான காணி 1988 ஆம் ஆண்டு மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் உரித்திணை மத்திய நிலையத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் காணிகளை நிறுவனத்திற்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | காணியின் உரித்தினை நிலையத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கும் போது 5 நிறுவனங்களுடன் வாடகை உடன்படிக்கைகள் | 2017 ஆம் ஆண்டில் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் காணி மற்றும் | உரிய முறையில் வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த வளாகங்களின் வாடகை மதிப்பீட்டு அறிக்கையை பெற்று கூறுவிலைகளை திருத்தி அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஒரு சதுர அடி ரூபா.63 முதல் ரூபா.165 வரையான மிகவும் குறைந்த விலைகளின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிட வாடகை வருமானம் உரியமுறையில் மாதாந்தம் அறவிடுவதற்கு நடைமுறை ஒன்றும் சுழற்ச்சியான முயற்சி ஒன்றும் எடுக்கப்பட்டிராத காரணத்தால் 17 வாடகையாளர்களுக்கு உரிய 5 வருடங்கள் வரையிலும் பெறவேண்டிய ரூபா.6,878,813 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இதுவரையிலும் வாடகை அடிப்படையிலிருந்து விலகிய 02 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,226,585 தொகையும் அதில் உள்ளடங்கியிருந்தது. | கட்டிடங்களை தனித்தனியாக மதிப்பீடு செய்தல் இடம் பெற்று இருந்ததுடன் ரூபா.2 மில்லியனுக்கு மதிப்பீட்டு கட்டணம் செலுத்தப்படாமையால் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக மற்றுமொரு மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு கட்டணத்தை செலுத்துமாறு ஜே.ஆர்.ஜெயவர்தன நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் பெற வேண்டிய அனைத்து வருமானங்களும் இதுவரையிலும் பெறப்பட்டுள்ளன. அவ்வாறு பெறவேண்டிய பழைய மீதிகளை செலுத்துமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் வாடகை கட்டணங்களை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலுவைப் பணத்தை அறவிடுவதை துரிதப்படுத்த வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நான்காவது காலாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட நிலையத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கியுள்ள 22 செயற்பாடுகளின் பெறுமதி ரூபா.6,875,000 ஆன 12 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் 06 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவற்றுள் 3 மாத்திரம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா.7,490,000 பெறுமதியான 9 செயற்பாடுகளுக்குரிய செயன் முன்னேற்றம் நான்காவது காலாண்டிற்காண செயன் | மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா.10.5 மில்லியன் அளவினை ஈட்டுவதற்கு முடியாது இருந்தமையால் 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முன்னேற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நான்காவது தளத்தில் 600 சதுர அடிகள் பரப்பிலான வளாகத்தின் கொவிட் 19 செயல் திட்ட அலுவலகத்திற்கு வாடகை இன்றி வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வளத்திற்காக நீர் மின்சாரம் மற்றும் சுத்திகரிப்பு கிரயமும் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வகுப்பறைகளாக வாடகைக்கு வழங்கப்படும் 2,379 சதுர அடி பரப்பளவானது வாடகை அடிப்படையில் வழங்கியமையால் ஆண்டினுள் ஈட்டப்பட்டிருந்த தொகை ரூபா.28,244 மாத்திரம் ஆகும். மேற்படி வளாகத்தினை உச்சமாக பயன்படுத்தியிராமையால் ஆண்டின் பெரும்பாலான காலம் குறை பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டது. | பிரதமர் அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 600 சதுர அடி பரப்பளவான வளாகம் கொவிட் 19 செயல் திட்ட அலுவலகத்திற்கு வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. விரிவுரை மண்டபங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டமைக்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அரசினால் பௌதீக ரீதியில் வகுப்புகள் நடாத்துதல் தடைசெய்யப்பட்டமை காரணமாக அமைந்திருந்தது. | குறித்த வளாகத்தினை உச்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) 2014 ஆம் ஆண்டின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் முழுமையான நிர்மாண ஒப்பந்தம் (3 தளங்கள்) ரூபா.6,451,087 தொகைக்கு நிறைவேற்றுவதற்கு ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கமைய ஒப்பந்தம் 2014 ஜூன் 15 ஆம் திகதி அளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதினும் கணக்காய்வு திகதியான 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி வரையிலும் கட்டிடத்தின் 2 தளங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரர் இணங்கியிருந்த ரூபா.2,002,572 தொகையான | இரும்பு படிகள் மற்றும் இரும்புக் கூரை நிர்மாணித்தல் ஒப்பந்ததாரரினால் புறக்கணிக்கப்படாததுடன் குறித்த பணிகள் அகற்றப்பட்டு மற்றும் ஒரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான காரணமாவது குறித்த பணிக்கு அதிக நிபுணத்துவத்துடனான நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் அதிக பாதுகாப்பு மற்றும் உறுதியுடன் நிர்மாணித்தல் ஆகும். | ஒப்பந்தத்தை நிறைவு செய்யாமையால் ஏற்பட்ட நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள நேர்ந்தமைக்கு உரிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் நிறைவேற்றி இருக்காதபோது ஒப்பந்த தொகையில் ரூபா.5,064,023 அதாவது 78.5% ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் இணங்கியவாறு இரும்புக் கூரை மற்றும் இரும்பு படிகளை நிர்மாணிக்காமையால் அப்பணிகள் வெளிவாரி தரப்பினர்களால் நிறைவேற்றுவதற்கு ரூபா.2,217,992 மேலதிகமாக செலவிட நேர்ந்திருந்ததுடன் இதனால் கட்டிடத்தின் நிர்மாண கிரயமும் அந்த அளவினால் அதிகரித்திருந்தது. | | |
| (ஆ) | இலங்கை வாஸ்து விஞ்ஞானிகளின் நிறுவனத்தின் குறிப்புரைக்கமைய இவ்வாறான ரூபா.5-10 மில்லியனுக்கு இடைப்பட்ட வணிக அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் சேவைக்கு செலுத்த வேண்டியது ஒப்பந்த பெறுமதியில் 10.3% ஆன போதிலும் மேற்படி நிர்மாணத்திற்காக மதியுரை பணிகளுக்கு நியமிக்கப்பட்ட வெளிவாரி பொறியியலாளர் ஒருவருக்கு விலைகேள்வியின் பெறுமதயில் 8% மற்றும் வருகைதரும் நாளொன்றுக்காக ரூபா.18,000 படி செயலாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மதியுரை கட்டணங்களை தீர்மானித்து ஒப்பந்த பெறுமதியில் 37 சதவீதத்திற்கு சமனான தொகை ஒன்று அதாவது ரூபா.2,401,761 செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சின் செயலாளர்கள் / பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்தின் ஆரம்ப பெறுமதி ரூபா.6,451,087 ஆகும். அதாவது அந்த தொகையில 37.23% மதியுரை கட்டணங்களாக செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள விலை கேள்வி பெறுமதியில் 8% மற்றும் வருகை தரும் நாளொன்றுக்காக ரூபா.18,000.00 படியாக செயலாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மதியுரை கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டு மதியுரை கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதா எனும் கூற்றுடன் இணங்குகின்றேன். | மதியுரை கட்டணங்களுக்காக பெறுகைகள் வழிகாட்டி கோவை மற்றும் ஏனைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சுத்திகரிப்பு சேவை மற்றும் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டிற்கு சேவை வழங்குநரை தெரிவு செய்யாது சுத்திகரிப்பு சேவை 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் மற்றும் பாதுகாப்பு சேவை 2021 ஒக்டோபர் 01 முதலாம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது முன்னைய வழங்குநரிடமிருந்தே தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2020/21 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கையின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஆகக்குறைந்த ஊழியர்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன் அதற்காக தண்டப் பணத்தை அறவிடுவதற்கு உரிய நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஊழியர்களின் வருகை, வெளிச் செல்லல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாது 2021 ஆம் ஆண்டு சுத்திகரிப்புக்காக ரூபா.887,758 செலுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக சுத்திகரிப்பு நிறுவனமொன்று மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றினை தெரிவு செய்வதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் குறித்த சேவைக்காக காணப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே அச் சேவையினை மேலும் 12 மாத காலத்திற்கு நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய ஊழியர்களின் எண்ணிக்கை சேவைக்கு அறிக்கையிடாத போதிலும் நிறுவனத்தினால் சுத்திகரிப்பு கட்டணங்களை செலுத்தும் போது குறித்த ஊழியர்களின் சேவைக்கு வருகை தந்த நாட்களின் எண்ணிக்கைக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் அதற்காக மேலதிக தண்டப்பணம் ஒன்றினை அறவிடுதல் அவசியமற்றது. 2021 ஆம் ஆண்டில் இரசாயன பொருட்களின் விலைகள் அதிகரிதமைக்கு ஒப்பாக குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இரசாயன பொருட்களுக்காக ரூபா.10,000 ஆன தொகை அதிகரிக்கப்பட்டது. | சேவை வழங்குனரை வருடாந்தம் தெரிவு செய்ய வேண்டியதுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளும் போது 2020/21 உடன்படிக்கைக்கு இணங்க சேவையில் ஈடுபடுத்த வேண்டிய திட்டவட்டமான ஊழியர் எண்ணிக்கை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன சில சந்தர்ப்பங்களில் ஊழியர் சட்டதிட்டங்களுக்கு முரணாக கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக 18 சேவை முறைகள் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பாதுகாப்பு சேவைகளுக்கு உரிய எண்ணிக்கையிலான ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஏப்ரல் 06 ஆம் திகதிய DMS/1835 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிலையத்திற்கான பதவயணி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 36 எண்ணிக்கையான பதவியணி அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் உள்ளபடியபன பதவியணி 26 மற்றும் 05 பதவிகளின் 10 வெற்றிடங்கள் நிலவின. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நிலையத்தின் பணி பொறுப்புக்கு பொருந்தாத 02 சமையற்காரர் பதவிகளும் உள்ள போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை நடைமுறைக்கு பொருந்தும் வகையில் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு உத்தியோகத்தர் பதவி முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2020 மார்ச் 13 ஆம் திகதிய DMS/1835 ஆம் இலக்க கடிதத்தின் கீழ் கடிதத்தை கீழிறக்கி கணக்காளர் பதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் வினவி உரிய திருத்தங்களை மேற்கொள்ளாது 2013 மே 29 ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்பட்ட உதவி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய சம்பளம் கணக்காய்வு திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அந்த திருத்தங்களை மேற்கொண்டு பதவியணிக்கு சரியான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். 2020 மார்ச் 13 ஆம் திகதிய DMS/1835 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நிறுவனத்தின் நிதி இயலளவு மற்றும் நிதி பிரிவின் பணிகளை கருத்திற் கொண்டு கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 2 வருடங்கள் 5 மாதங்கள் வரையான காலம் கடக்கும் வரையிலும் அதற்கு உரிய கவனம் செலுத்தப்படவில்லை. எனினும் 2022 ஆகஸ்ட் மாதத்தில் உதவி கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் நடைமுறை அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்காக செயலாளர் நாயகத்தினால் சான்றுபடுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |